முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமானே ஓலைச்சுவடிகள் மூலம் துறையூர் ஓங்காரக்குடிலாசானுக்கு அருளிய அருள்வாக்கு. இந்த சுவடி வாசகங்களை பக்தியுடன் கேட்டால் கேட்கின்ற உங்களுக்கு ஞானம் சித்திக்கும். உங்களது துன்பம் எல்லாம் தீரும். இதை உங்களுக்கு தருகின்ற நாங்களும் புண்ணியம்பெறுவோம். கேட்ட நீங்களும் புண்ணியம் பெறலாம். நீங்கள் தொடர்ந்து கேட்டு வந்தால் எதுபாவம் எது புண்ணியம் என்பதை தெரிந்து கொள்வீர்கள் உயிர்கொலை செய்வது பாவம் என்பதை உணர்ந்து மாற்றிக்கொள்வீர்கள். பாவபுண்ணியங்களை அறிந்து தெளிந்து நீங்கள் செய்த பாவங்களில் இருந்து விரைந்து விடுபட்டு உண்மை ஞானத்தையும் அடையலாம்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : **1229**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.02.2023**, வியாழக்கிழமை

1. தர்ம சக்திமிகு அரங்கனே
   தவ பலமிக்க தேசிகனே
   பெருமைமிக்க ஞானலோகம் படைக்க
   பிரணவக்குடில் படைத்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் **26** ம் நாள் **09.02.2023**, வியாழக்கிழமை)
   வரங்கள் தந்து அரங்கன் உன்னுள் யானே
   வல்லமை கூட்டி இந்த உலகை காத்துவர
3. வருகவே அரங்கன் உன் சொல் செயல்கள் அனைத்தும்
   அகிலத்தை மாற்றும் வேதமாக மாறும்
   வரமென நீதருகின்ற தீட்சை எல்லாம்
   வணங்கி வருபவர்க்கு சித்தியாக அருளும்
4. அருளவே அரங்கன் உன்
   வழிகளை ஐயமற ஏற்று
   பெருமளவில் உலகமெங்கும் தர்மம்
   பேருலகோர் செய்துகொண்டு வருகவருக
5. வருகவே அதுவே ஞானமாகி
   வருபவர் அனைவரையும் பரிபக்குவப்படுத்தி
   துரிதகதி உலகமாற்றமாக
   தேசமெல்லாம் ஞானவான்கள் தலைமைகூடி
6. கூடியே ஞான ஆட்சிக்காலம்
   குரு அரங்கன் உன்கருணையாலே
   ஈடேறும் சடுதி இந்தபேருலகில்
   இந்தவித அற்புதம் ஆறுமுகன் என்னால் சடுதி நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–